உ

போரூர் முருகன் துணை.

பழனியாண்டவர் தோத்திரமென்னும்

சிவ சுப்ரமண்யர் அகவல்.

சென்னை சூளை

சி. வே. துரைசாமி முதலியார் அவர்களது

பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

34, ஆண்டியப்பநாய்க்கன் தெரு, சூளை, மதராஸ்.

ரூபாவதி

அல்லது

சிதம்பர சாமியார்.

(இது ஓர் நூதன துப்பறியும் தமிழ் நாவல்.)

இதில், கதாநாயகியாகிய ரூபாவதியிடமிருக்கும் இரகய கடிதத்தை மேகநாதப் பிள்ளை யென்பவன் கைக் கொள்ள எண்ணி, மகாயோகிபோல் நடித்து வஞ்சனைத் தொழில்களையே மேற்கொண்டு திரியும் சிதம்பரசாமியாரின் உதவியினால் அக்கடிதத்தைப்பெற அந்த ரூபாவதியையே விவாகஞ் செய்துகொள்ள முயலுவதும், ஒரு நாள் திடீரென்று ரூபாவதியும் இரகசிய கடிதமும் காணுமற் போவதும், பிறகு துப்பறியும் நாகலிங்கம் சிதம்பர சாமியார் பாதாள அறையில் அநேக கஷ்டங்களை அனுபவிப்பதும், கடைசியில் நாகலிங்கன் சிதம்பர சாமியாரை செங்கற்பட்டிலுள்ள ஒரு ஓட்டலில் கண்டு பிடித்து அவ்வஞ்சகனிடத்திலிருந்த இரகசிய கடிதத்தை வாங்குவதும், சிதம்பர சாமியார் உடனே தற்கொலை புரிந்து கொள்ளுவதும் ஆகிய பற்பல விஷயங்கள் மிகு அருமையாக அமைக்கப்பட்டுள்ளது. இடை இடையே துப்பறியும் நாகலிங்கன் சாமர்த்தியங்கள் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தக் கூடியது. அதிலும், மேற்சொன்ன சம்பவங்களன்றி உடனுக் குடனே மனம் திடுக்கிடக் கூடிய ஆச்சரியகரமான கோரக் கொலைகளும் கோர்ட்டின் விசாரணைத் தீர்ப்புகளும், ரூபாவதி முடிவில் தான் காதலித்த நாயகனையே மணம் புரிவதும், அநேக சம்பாஷணைகளும் பொருந்தியிருப்பது மிகவும் வியக்கத்தக்கதே யாகும். இதன் விலை அணா 0 12 0

உ

ஸ்ரீ தண்டபாணியே நமா.

சிவ சுப்ரமணியர் அகவல்.

விநாயகர் காப்பு.

சுந்தராநந்தனெனுஞ் சோதிசுப்ரமண்யன்மேற்
செந்தமிழாலேயகவல் செப்புதற்குவந்தருளும்
விந்தைதமிருங்கந்தருக்கு மேலாகிமுன்பிறந்த
தந்திமுகச்சுந்திரன்றாள் காப்பு.

அகவல்.

தந்திமுகற்கிளைய கந்தாசரணம்
அந்திரவானவர்க் கதிபாசரணம்
சரணஞ்சரஹண பவனேசரணம்
அரஹராசத்ரு சங்காராசரணம்
சத்திவேலேந்துஞ் சாமியேசரணம்
சித்திரமயின்மேற் செல்வாசரணம்
அமரர்கள்பணியு மமலாசரணம்
தமியேன்வினையைத் தவிர்ப்பாய்சரணம்
கோலாகலனே குமராசரணம்
பன்னிருதோளிற் பரமனுற்மழுவும்

பாங்குடனெடுத்துக் காங்கையாவாவா
பச்சைமயிலேறிப் பாகுமென்மொழியா
நச்சுதேணிகர்விழி நாயகிமார்கள்
இருபுறமிலங்க விமையவர்போற்றச்
சுருதியார்ப்பத் துறந்தவர் துதிப்பக்
கோலாகலத்துடன் குமரனேயென்றன்
மேலாயருள்வைப் பாவேவேலா
கந்தாவாவா கடம்பாவாவா
வந்தாள்மயின்மேல் மணியேவாவா
படிகொடு தூதர்கள் பாசம்விட்டெரிந்துயிர்
கொடுபோவதற்குக் கொடுமையாய்வருங்காற்
பஞ்சமாபாவியேன் பயந்துருடுங்குஞ்
சஞ்சலம்வராமற சண்முகாக்காக்க
பாயும்புலியு நோயுமூறுமல்
மாயவலையில் மயங்கிநில்லாமல்
காக்கக்காக்கக் கடவுளேகாத்து
சேர்க்கச்சேர்க்கவுன் றிருவடிநிழலில்
அம்பலவாண னருமைபுத்திரனே
நம்பினேனுன்னை நமக்கடைக்கலந்தா
மாலோன்மருகா மயிலோன்சரணம்
குரமாதிலங்குங் கொண்காசரணம்
துறவோர்போற்றுந் தூயோய்சரணம்
திங்களைத்தரித்த சிவனதுபுதல்வா
செங்கையில்வேலணி செம்மலேவாவா
சரவணபவனெனும் மடியார்தமக்கே

அருகேநிற்கு மண்ணலேவாவா
திருச்செந்தூர்வாழ் செல்வியோய்வாவா
திருப்பெருங்குன்றத் துறையோய்வாவா
குருபரவேலா குமாராவாவா
ஒருகையில்வேலு மொருகையிற்பிரம்பும்
மூன்றுகையில் முனையொளிர்வாளும்
நான்குகையி னல்லசூலமும்
ஐந்துகையி லங்குசபாசமும்
ஆறுகையில் வீறுகோடாலியும்
ஏழுகையி னிடிக்குந்தண்டமும்
எட்டுக்கையினிற் பட்டமுமிலங்க
ஒன்பதுகையில் சங்குசக்கரமும்
பத்துகையிற் படைபீரங்கியும்
பதினொருகையிற் சிதரிடுவெடியும்
அல்லும்பகலும் பில்லிசூனியமும்
ஆடும்பேயு நாட்டைவிட்டோட
அடியடிபிடிபிடி நெறிநெறிமுறிமுறி
பொடிபடபொடிபட எறிஎறிவேலினால்
அன்னையுநீ என்னப்பனுநீயே
சென்மப்பிணிக்குத் தேசிகநீயே
அருமையாய்வந்தே திருவருள்புரிந்து
சிறியனேக்கார்க்குஞ் சிவமலைக்கந்தா
அந்திற்சொக்க ரருளியபாலகா
மந்திரகிரிமேல் வளருகாங்கயனே

சுப்ரமண்யர் அகவல்.

அழகாமேருவி முலகுகிரியில்
எழிலோடமரு மெம்பெருமானே
பலமலைகளிலும் பலவிளையாடி
நிலைபெறுவயிர நீண்முடியோனே
அந்தமிழனக்கே யன்புடன்றுநீ
குருந்தமாமலையிற் குடிகொண்டவனே
அன்னமுமுடையு மதியபாக்கியமும்
மன்னுதாநீ மருதக்கிரியோய்
என்றுமென்னை யிடுக்கண்ணுளுமல்
பொன்மலைக்குமரா போற்றினேனுன்னை
அண்டவாத வரையாப்பிருமல்
கண்டமாலையுங் காய்ச்சலுங்குளிரும்
இன்னம்பலபல வியாதிகளெல்லாம்
உன்றன்பெயரு முன்னண்ணன்பெயரும்
நினைத்துநீறள்ளி நீட்டியேபோட்டால்
கனத்தகாற்றிற் பஞ்சுபோற்கடிதில்
ஓடிடுமன்றே வொண்ணுதலுமையாள்
பீடுறுசுதனே வாழ்வெருமானே
ஆதியில்செய்த வினையமூதேவி
மூறிஞ்சோடவு மூடுக்குமுருகையா
உன்றிருநீருகண்டால் சீரிவருமிருகம்
சிங்கமண்டாது சிவகிரிக்கந்தா
அன்னடமயிலேறி என்னேரம்வருவாய்
இடும்பனைக்கூட்டி இசூதனம்வருவீர்

அத்தமூலாளும் சித்திரைமாதம்
நித்தியவருவாய் வெற்றிவேலவனே
வைகாசிமாதம் ஓய்யாரமாக
மெய்யாவாவா வேலாயுதனே
ஆனியிலொருநாள் சரவணமுருகா
ஆடிமாதம் நாடுவேனுன்னை
தேடியேவந்து சிவபதந்தாரும்
ஆவணிதனிலுன் சேவடிகாணக்
கோபுரம்விட்டுக் குமராவாவா
எப்போதுநீயும் இப்பவேவந்து
அற்பசிமாதம் அருள்தருவாசே
நித்தியமுன்னைத் தோத்திரம்செய்யக்
கார்த்திகைமாதம் கருதிவாகந்தா
ஆரணப்பொருளே காரணமூர்த்தி
மார்கழிமாதம் வந்தனைக்காரும்
ஐயாஐயா வையாபுரியான்
பையவேவாரும் சாமிசண்முகனே
பாசுபதமும் அமர்வைபோகமும்
மாசியில்வந்து வரந்தரவேண்டும்
சங்கரிபெற்ற தங்காசங்கா
பங்குனிமாதம் பழனிப்பண்டிதனே
ஆயன்மருகா மலையேஸ்பரனே
ஞாயிர்வாரம் ரட்சிப்பாய்வந்து
மங்கைபங்காளா செங்கையில்வேலா

திங்கட்கிழமைவாருஞ் சேவலங்கொடியோய்.
பவளமதைநீக்கித் தவமதுதருக
செவ்வாய்க்கிழமை மெய்யாவாரும்
பதமதுகொடுத்து விதவிதமான
புதன்கிழமைவாரும் பொன்மலிவேலா
வியாழன்வாரும் வேலாயுதனே
புள்ளிமாநீன்ற வள்ளிநாயகனே
வெள்ளிக்கிழமை வெளிவாவேணும்
புன்மயிலேறித் தினக்குறத்தியும்நீயும்
சனிக்கிழமைவருவாய் சரவணதுரையே
சவுந்தரவல்லி சதாசிவம்பரிதந்த
சரவணபவனே சிக்கந்தமலையில்
தாமரைப்பொய்கையில் நேர்மையாய்வளர்ந்து
சோமனைத்தரித்த சொக்கரிடம்நான்
தவிர்ந்துவாடாமல் வரந்தாவேணும்
பழனபுரியிற் சரவணபவனே
சந்திரன்துலங்க இந்திரனிலங்க
சிந்தையில்வந்து சிவபதந்தாரும்
தஞ்சமென்றுன்னைப் போற்றினேன்முருகா
நெஞ்சுக்குமேலே நின்றிடுமா.

சுப்ரமண்யர் அகவல்

முற்றிற்று.